1987 நவம்பர் 17]

சென்னை நகர கூட்டுறவு நியாய விலைக் கடைகள்.

146—(* வினா எண் 12925) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைகளை நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நியாய விலைக் கடைகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிவில் சப்ளைஸ் கடைகளெல்லாம் கூட்டுறவு நியாய விலைக் கடைகளாக இன்றைக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. அப்படி மாற்றப்பட்டிருக்கின்ற, சென்னை மாநகரத்தில் இருக்கின்ற கடைகளில் ஒட்டுமொத்தமாக பொருட்களை வைக்க முடியாத ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினால், பொதுமக்களுக்குப் பல நேரங்களில் கேட்கின்ற பொருள்கள் கிடைப்பதில் காலதாமதம் ஆகிறது. எனவே, இதைக் கவனத்திலே கொண்டு இன்றைக்கு சிவில் சப்ளைஸ் கடைகளையெல்லாம் மாற்றிவிட்டு, கூட்டுறவு டி.யு.சி.எஸ். கடைகளின் வாயிலாக வழங்கப்படுகின்ற உணவுப் பொருட்களைச் சீராக விநியோகம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்த வியாபாரத்தில் ஈடுபடும். இதைப்போல சில்லறைக் கடைகளை நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்துவது சரியல்ல என்கின்ற காரணத்தினால் கூட்டுறவுத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையின் மூலம் அந்தக் கடைகள் 1—10—1987 முதல் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. குறைபாடுகள் இருந்தால் கூட்டுறவுத் துறை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிவில் சப்ளைஸ் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த ஊழியர்களுக்கு டி.யு.சி.எஸ்.-லே வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறதா? ஏற்கெனவே நியாய விலைக் கடைகளின் மூலமாக வழங்கப்படுகின்ற உணவுப் பொருட்களை, எண்ணெயாக இருந்தாலும்,

அரிசியாக இருந்தாலும், அளவுகளிலே குறைவு ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அதை பாக்கெட் மூலம் வழங்கலாம் என்ற ஒரு கருத்து அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்பட்டது. எனவே அந்தக் கருத்தை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் விரும்பினால் கூட்டுறவுத் துறைக்குச் செல்லலாம். இல்லையென்றால் நுகர்பொருள் வாணிபக் கழகத்திலேயே அவர்கள் செயலாற்றுவார்கள். அளவுக் குறைவுக்காக அவற்றை பாலிதீன் பைகள், மற்றவற்றிலே போட்டு விநியோகிக்கப்பட வேண்டுமென்கிற யோசனை ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதைக் கூட்டுறவுத் துறையின் மூலம் கேள்வியைப் போட்டு தக்க பதிலைப் பெற கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே சிவில் சப்ளைஸ் கீழ் இருந்த கடைகளெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களிடம் வந்து இருக்கிற காரணத்தால், ஒரு கடைக்கு, 1,000, 2,000 என்று கார்டு இருப்பதனாலே மக்கள் அதிக நேரம் நின்று இன்னலுக்கு ஆளாக்கப்பட்டு அவதிப்படுகிறார்கள். அதை விரிவாக்கி, இன்னும் அதிகக் கூட்டுறவுச் சங்க கடைகள் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை பரிசீலிக்கும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதியிலே உள்ள கார்டுதாரர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களை அமைத்து அவர்களே பொருள்களை வாங்கிக் கொள்வதற்கு வேண்டிய வழிவகைகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்த யோசனையின் அடிப்படையிலேதான் இது கூட்டுறவுத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறை இந்தக் கருத்தைக் கவனித்துக் கொள்ளலாம்.

1987 நவம்பர் 17]

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் கடைகள் இப்பொழுது இயங்குகின்றனவே, அந்தக் கடைகளில் அழுகல் வெங்காயம் வாங்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்களே, அந்த அழுகல் அடிக்கின்ற கடைகள் மீது ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி கூட்டுறவுத் துறைக்குப் போடவும்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்த அழுதம் சிறப்பங்காடிகள் அத்தனையும் கூட்டுறவுத் துறைக்கு மாற்றப் பட்டுவிட்ட காரணத்தினால் அவை, எங்கெங்கு சில்லறைக் கடைகள் வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தனவோ, அந்தந்த இடத்தில், கூட்டுறவுத் துறை மூலமாக, கடைகள் அமைத்து விற்பனை செய்யக்கூடிய நிலையை உருவாக்க அரசு முயற்சிக்குமா? ஆந்திராவைப் போன்று, பட்டதாரிகளுக்கு ஏஜன்சி முறையிலே அந்தக் கடைகளைக் கொடுத்து நடத்துவதற்கு திட்டம் ஏதேனும் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அத்தகைய யோசனை ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது கூட்டுறவுத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையின் மூலம் கடைகள் எங்கெங்கு ஆரம்பிக்க முடியவில்லையோ அங்கு, சில கிராமங்கள் இருக்குமானால், அங்கு படித்த, பட்டம் பெற்ற, அல்லது வேலையில்லாத வாலிபர்கள் யாராவது முன்வருவார்களானால், அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகள் சிறப்பாக செயல்படவும் வலுவான நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை உருவாக்கவும் அண்மையிலே நாடாளுமன்றத்திலே நிறைவேற்றிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசு ஆவன எல்லாம் செய்யும்.